**பதுளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 3 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 10 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூன் 16 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பதுளை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த வருடம் திசெம்பர் 31 இல் திரண்ட நிதியில் மீதி கொண்டுவரப்பட்ட ரூபா 40,751,758 மீளாய்வாண்டில் ஜனவரி 01 ஆந் திகதி ஆரம்ப நிலுவையாக ரூபா 44,149,009 ஆக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இனிவரும் காலத்தில் சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 26 எண்ணிக்கையான சென்மதியாளர் நிலுவை ரூபா 1,590,632 நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இனிவரும் காலத்தில் சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| 1987 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் பந்தி 127 | 25 சுடலைக்கு சொந்தமான காணிகள் அளவீடு செய்ய அல்லது அதனை கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அளவீடு செய்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரு சுடுகாடு சம்மந்தமான அளவீடு மாவட்ட நிலஅளவை திணைக்களத்தின் கடிதமாக கொடுக்கப்பட்டது. மற்றும் 23 சுடலைகள் சம்மந்தமாக பிரதேச செயலகத்துடன் கலந்துரையாடி அளவீடு செய்ய அபிப்பிராயம் எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,987,105 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,964,244 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் வருமான | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,913,704 | 3,913,704 | 2,538,018 | 1,480,746 | 2,013,704 | 2,013,704 | 2,256,177 | 967,101 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 685,000 | 685,000 | 687,570 | - | 355,000 | 355,000 | 759,680 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 43,561,500 | 33,200,000 | 25,491,761 | 29,648,471 | 15,642,500 | 10,016,000 | 29,683,954 | 26,080,029 |
| | மொத்தம் | 48,160,204 | 37,798,704 | 28,717,349 | 31,129,217 | 18,011,204 | 12,384,704 | 32,699,811 | 27,047,130 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 2 வருடத்திற்கு அதிக காலமாக காணப்பட்ட நிலுவை ஆதனவரி, நிலுவை மூலதனப் பெறுகை, நிலுவை கடை வாடகை, நிலுவை திண்மக் கழிவு வரி, நிலுவை நீர் இணைப்பு கட்டணம், நிலுவை நீர் வரி, நிலுவை ஆட்டோ தரிப்பிட வாடகை மற்றும் நிலுவை உறுப்பினர் படிகள் ஆகியவற்றின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 4,401,023 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிடைக்க வேண்டிய கணக்குகள் சம்மந்தமாக வருமானத்தை விரைவாக சேகரிப்பதற்கு வருமான பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. மற்றும் அவை தீர்ப்பனவு செய்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தில் விரைவாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,635,133 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் ரூபா 25,218,539 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு அது தொடர்பான நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | அது தொடர்பான அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| இரு வருட காலத்திற்கு மேலாக காணப்படுகின்ற ரூபா 3,445,206 பெறுமதியான கடன்கொடுநர் மீதி மீளாய்வாண்டிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுநர் நிலுவையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடத்தில் கொடுப்பனவு செய்ய நிதி ஏற்பாடு காணப்படவில்லை. ஏற்பபாடு கிடைத்ததும் விரைவாக தீர்ப்பனவு செய்கின்றேன். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு 2014 திசெம்பர் 17 ஆம் திகதி கிடைத்த ரூபா 7,676,144 பெறுமதியான ஒரு ரோலர் பயன்பாடுமின்றி சபை காப்பகத்தில் தரித்திருந்த போதிலும் ரோலருக்காக 2018 மற்றும் 2019 வருடங்களில் ரூபா 245,245 பெறுமதியான திருத்தச் செலவு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியான முறையில் முகாமை செய்யப்பட வேண்டும். | இவ்ரோலர் செயற்பாட்டில் இல்லாமையாலும் திருத்தச்செலவு கூடுதலாக உள்ளமையாலும் உள்ளூராட்சி சபைக்கு மாற்றம் செய்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4 பெறுகைத் திட்டம்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இனிவரும் வருடத்தில் தயாரிக்க நட்வடிக்கை எடுக்கின்நேன். |

### 3.5 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் உள்ளக கணக்காய்வு சரியான முறையில் செய்வதற்கு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி ஒரு வருடத்தில் 4 கணக்காய்வு மட்டுமே முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | இனிவரும் காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்த ஏற்பாடு செய்யப்படும். |